முளைத்தெழும் தமிழைக் கிள்ளிவிடும் முயற்சி!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (20—10—49) வெளியூர் (21—10—49) [இதழ் 70

நான்காவது வகுப்பிலேயே இந்தியாம்!

தமிழை அழிக்கும் கல்வி அமைச்சர்!

ஆட்டுவித்து ஆடவைக்கும் அரசாங்கம்

இந்தியை நான்காவது வகுப்பிலேயே, ஒரு பாடத்திட்டமாக வைப்பதன் மூலம், எதையும் கற்றுக்கொள்ளும் தன்மை வாய்ந்த அந்த மிக இளம் பருவத்திலே, குழந்தைகள், தேசிய மொழி பற்றிய அறிவை, எளிதில் அறிந்து கொள்ளும்படி செய்ய இயலுமா, என்ற ஆலோசனையில கல்வி அமைச்சர் தோழர் மாதவமேனனும், மாகாணக் கல்வி ஆலோசனைக் குழுவினரும் இறங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"தோலைக் கடித்துத், துருத்தியைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிப்பது" என்பதுபோல, இந்தி மொழி, படிப்படியாகப் பலவற்றைக் கடித்துப் பற்றிக்கொண்டுவந்து, இப்பொழுது இளம்பிள்ளைகளின் இளகிய மூளையிலே முளைத்தெழும் தமிழ் மூளையைக் கடிக்க விடப்பட்டுவிட்டது.

இந்தி, தமிழ் நாட்டிற்கே— திராவிடகத்திற்கே தேவையில்லை, வரவேண்டாம், என்றோம், புகுந்தது! புகுந்தாலும் உலவிவிட்டுச் சென்றுவிடும் என்று எண்ணினோம்; பிரசார சபை வைத்துக்கொண்டு இங்கேயே தங்கியது! இந்த நாட்டிலேயே வேண்டிய அளவுக்குப் பணத்தைச் சுரண்ட ஆரம்பித்தது! பிறகு அரசாங்கத்தின் சலுகையையும், ஆதரவையும் பெற்றது! பிறகு, அரசாங்கத் திடத்திலேயே வளர ஆரம்பித்தது! உதவிச் சம்பளம் பெற்று வளர்ந்தது! ஆச்சாரியார் மந்திரிசபை காலத்தில், நூறு பள்ளிகளில் இடம் கேட்டுக் கொண்டு நுழைந்தது! மாணவர்கள் விரும்பினால் வந்து அருகே உட்காருகிறேன் என்று முதல் மூன்று பார மாணவர்களிலும் இடம் பெற்றது! இந்தியின் 'பங்காளி'களாகப் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள், இந்திக்கு அருகே உட்காரும்படி மாணவர்களைப் பயமுறுத்தினார்கள்! மீண்டும் இப்பொழுது காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடன், முதல் மூன்று பாரங்களில் கட்டாயமாக உலவித்தான் தீருவேன் என்று உலவிற்று! இந்தத் தேசத்திற்கே உரிய 'தேசிய மொழி' நான் தான் என்று சொல்லி இப்பொழுது நாடெங்கும் இறுமாப்புடன் பேசிவருகிறது! தமிழைக் கண்ட கண்ட இடமெல்லாம் துரத்தியடித்து, அதன் இடத்தைப் பிடித்துக்கொள்வது என்ற வேட்டை முறையிலே இறங்கி, நாட்டுவாழ்த்து, நாணயம், தபால் தலை, ரயில்வே நிலையத்திலுள்ள ஊர்ப்பெயர் காட்டும் பலகை, வானொலி, சினிமா, பாடப்புத்தகங்கள், அரசாங்க ஏடுகள் ஆகிய எல்லாவற்றிலும் சிறிது சிறிதாக இடம் பிடித்துவிட்டது! அந்த 'விஷப்பூச்சி'யைத் தூண்டிவிட்டு. இளமமாணவர்களின் உள்ளத்திலே முளைகண்டிருக்கும் தமிழ் வித்துக்களைத் தின்னச்சொல்கிறார் மந்திரி மாதவமேனனார்.

ஆறும் பாரத்திலேயே மூன்று மொழிகள் கற்க முடியாத பருவத்தில் மாணவர்கள் இருக்கிறார்கள், ஆகவே அவர்களுக்கு அந்தப் பருவத்தில் அவசிய மொழி இரண்டை மட்டும், அதாவது தாய்மொழி-ஆங்கிலம் இரண்டைமட்டும் போதித்தல் போதும், வேறு மொழி தேவையில்லை, தேவையானால் உயர்வகுப்புகளில் விருப்பப் பாடமாகப் படித்துக்கொள்ளச் செய்யலாம் என்று கல்வித் துறை ஆராய்ச்சி அறிஞர்களெல்லாம் கூறுகிறார்கள். ஆறுவது வகுப்பில் (முதல்பாரம்) இந்தியைப் புகுத்தியிருப்பதே கொடுமை என்று கூறும்போது, அதை நான்காவது வகுப்பிலேயே புகுத்தக் கல்வியமைச்சர் முயலுகிறார் என்றால், அது பற்றி என்ன கருதுகிறீர்கள்? அப்படிப்பட்ட அவர் போக்குக்கு அறியாமை காரணம் என்பதா? அகங்காரம் காரணம் என்று கூறுவதா? ஆணவந்தான் என்று செப்புவதா? வடநாட்டிற்குக் காட்டும் அடிமை மனப்பான்மை என்று சொல்வதா? அல்லது தமிழையே ஒழித்துக் கட்டிவிட செய்யும் முயற்சி என்று இயம்புவதா? என்ன கூறுவது!

இந்தியையும், சமஸ்கிருதத்தையும் உயர்த்திப் பேசி, தனித் தமிழ் வளர்வதை, ஆங்காங்கு, மந்திரி மாதவர் இழித்துப் பேசி வருவதைப் பார்த்தால், அவர் தமிழை ஒழித்துக்கட்டவே முயற்சி செய்கிறார் என்று கூறத்தோன்றுகிறது. தமிழ் நாட்டில் கல்வி அமைச்சர் இப்படி ஒருவர் அமைய வேண்டுமா! ஏ! தமிழகமே-திராவிடமே சிந்தித்துப்பார்!

இந்தியை நான்காவது வகுப்பிலேயே புகுத்திவிடலாமா என்பது பற்றி முடிவு கூற, இந்தப் பிரச்சினை, ஆயும் திறமையுடையோர் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம். எந்தக் குழுவிடம் எது அனுப்பப்பட்டால் தான் என்ன, இன்றைய காங்கிரஸ் மந்திரி சபைதான், தான் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்று எண்ணிக் கொண்டிருக்கிறதே! அது எதையும் செய்யும், காரணம், 'நியாயி'கள் ஆட்சி!

நாட்டவர் நலம் பெற நல்லவழி — இலட்சியப் பேச்சா?

சொல்லில் செப்படிவித்தை வேண்டாம் - செயலாற்றுங்கள்!

"மக்கள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் போன்ற வசதிகளைச் செய்துதர வேண்டியது பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் கடமையாகும். தொழிலாளர்களின் வருமானம் மிகக் குறைவானதாக இருக்கிறது. இதைக்கொண்டு அவர்கள் மேதவையற்ற நிலையில் வாழ்க்கை நடத்த முடியாது."

என்று சென்னை முதலமைச்சர், வண்ணாரப்பேட்டை குமரன் மைதானத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். உண்மையை உள்ளபடி அவர் வெளியில் எடுத்துக் கூறியுள்ளார்; பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமையையும், எளியவர்கள் நிலையையும் உணர்ந்துள்ளார். ஆனால் இதற்காக அரசாங்கம் என்ன செய்துள்ளது? இவற்றிற்காக என்னத் திட்டங்களை வகுத்திருக்கிறது? என்பனவற்றை அவர் விளக்கவில்லை. வகுத்திருந்தால் அல்லவா அவர் விளக்கியிருக்க முடியும்! உணவு, உடை, இடம் ஆகியஉயிர் நாடித் தேவைகள் மூன்றுக்கும், இந்த நாட்டிலே, முன் எப்போதுமில்லாப் பஞ்சம் தோன்றிவிட்டதெனின், இவற்றைப் போக்குவதற்குத் திட்டம் போட முடியாதவர்கள் மேனுடுகளைப் போன்று பதவியினின்று வெளியேறி இருக்கவேண்டும். ஆனால் இங்குள்ள மக்கள் மேனாட்டினரைப்போல விஷயஞானம் உள்ளவர்களாக இல்லாமையால், இலட்சியப் பேச்சைப் பேசிக் கொண்டே காலந்தள்ள முடியும் என்பது காங்கிரஸ்காரர்களுக்கும், அவர்களிலிருந்து ஆட்சிப் பீடம் ஏறியுள்ளவர்களுக்கும் நன்கு தெரியுமாதலின், அவர்கள் மேதெனுழுகப் பேசி, திட்டமொன்றும் நிறைவேற்றாமலே காலந்தள்ள முயலுகின்றனர்.

"தொழிலாளரின் வருமானம் பெருக வேண்டும், ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதொன்றே காங்கிரசின் இலட்சியமாகும்" என்றும் முதலமைச்சர் கூறினார்.

ஆலை வேலைநிறுத்த காலத்தில், தொழிலாளர் நடத்தப்பட்ட முறையினை முதலமைச்சருக்கு நினைவூட்டுகிறோம். சென்னை பக்கிங்காம் கர்னாட்டிக் ஆலையிலோ, அன்றி வேறு எந்த ஆலையிலோ ஆண்டுக் காண்டு கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு அந்த ஏழைத் தொழிலாளருக்கு ஏதேனும் கூலி உயர்வு தர முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதா? இதில் நம்மவர் அரசாங்கம் தலையிட்டுத் தொழிலாளருக்கு நலன் புரிய முயன்றதா? அன்றி அடக்கு முறைக்கு ஆளாக்கித் தொழிலாளரைப் பணிய வைத்ததா? என்பதை முதலமைச்சர் சற்றுச் சிந்தித்துப் பார்த்துப் பேசுவாரானால், மேற் கண்டவாறு கூறியிருக்க முடியாது. காங்கிரசின் இலட்சியங்கள் பலபல. ஆனால் ஒரு இலட்சியமாகிலும்உடனே நிறைவேற்றப்படக் கூடியதன்று என்றும், அவற்றை நிறைவேற்றுவதுபற்றிய கேள்வியே பெருங் கேள்வியாயிருக்கிற தென்றும், காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபியே கூறியுள்ளாரென்றால், காங்கிரசின் இலட்சியம் ஏட்டுச் சுரைக்காய் என்று கூறுவதில் தவறு ஒன்றும் இருக்கமுடியாதல்லவா?

எனவேதான், மேலும்மேலும் இத்தகைய இலட்சியங்களையே மக்களிடைக் கூறிக்கொண்டிருக்கும் வேலையைவிட்டு, பொறுப்புள்ள சர்க்காரின் கடமையென்ன வென்பதை முதலமைச்சரே கூறியுள்ளபடி, அக்கடமையினை மேற்கொண்டு பணியாற்றினால் நாட்டவர் நலம் பெறுதல் கூடும்.

இன்று முதல்

"மாலை மணி"

ஆறு பக்கங்கள்

விலை அணா ஒன்று

இந்திய பகுத்தறிவாளர் முதல் மாநாடு

டிசம்பர் மாதம் 18-ம் தேதி இந்திய பகுத்தறிவாளர் மாநாடு ஒன்று, சர். இரகுநாத பி. பரஞ்சிபே அவர்கள் தலைமையில நடைபெறும். செப்டம்பர் 9-ம் நாள் ரோமில நடைபெற்ற சர்வதேச பகுத்தறிவாளர் மாநாட்டோடு தொடர்பு படுத்தி இதனை நடத்துவது என்று சென்னை பகுத்தறிவாளர் குழு முடிவு செய்துள்ளது. சென்னைக் கூட்டத்தின வரவேற்புக் கழகம் சென்னை, பிராட்வேயில 9-ம எண்ணுள்ள கட்டிடத்தில அமைக்கப்பட்டுள்ளது.

பகுத்தறிவு இயக்கத்தின் நோக்கம், நாட்டின சிந்தனையாளரின சக்தி மக்களுடைய பகுத்தறிவை வளர்க்கப் பயன படும்படி செய்வதேயாகுமென்றும், இது சம்பந்தமாகக் கூட்டப்படும் இம்மாநாடு அரசியல சம்பந்தமற்றதாயினும், உறுப்பினர்களின தனிப்பட்ட உரிமை இதனால் பாதிக்கப்படாதென்றும் அறிவிக்கப்படுகிறது.

இக்கூட்டம் நடத்துவதில அக்கறை உள்ளவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வரவேற்புக்குழுத் தலைவர், தோழர் எஸ். இராமநாதன் அறிவிக்கிறார்.

மாலை மணி

சென்னை 20—10—49 வியாழக்கிழமை

தீபாவலியா? மதியீனமா?

தீபாவலி — இந்துமதப் பண்டிகைகளிலே அதிகச் செலவோடும், ஆடம்பரத்தோடும் கொண்டாடப்படும் பண்டிகை !

இந்து மதப் பண்டிகைகள் பெரும்பாலானவைகளுக்கு, அர்த்தமிருப்பதில்லை — இருந்தாலும் அதன் தந்திர சூட்சமம் மக்கள் அறிந்துகொள்ளும்படியாக வெளிப்படையாக வைக்கப்படுவதில்லை ! பெரும்பாலானவை அபத்தம்நிறைந்தவை—ஆபாசம் கொண்டவை ! எப்பவோ, எதற்காகவோ, எந்தச் சூழ்நிலையிலோ ஏற்பட்ட நிகழ்ச்சிகளை, மக்கட் கூட்டத்திடையே அறிவாணை செலுத்தி வந்த புரோகிதக் கூட்டத்தினர், தமக்குச் சாதகமாகவும், தமக்குப் பெருமையளிக்கக் கூடியவகையிலும் திருப்பிக் கொண்டு, அவைகளுக்குப் பண்டிகைகள் என்று பெயரிட்டும், அவற்றிற்குத் தம்மாலான காரணங்களைக் கூறிக்கொண்டும் வந்த முறையினாலேயே, தீபாவலி போன்ற அபத்தப் பண்டிகைகள் இந்நாட்டு மக்களிடம் வேரூன்ற ஆரம்பித்தன.

இத்தகைய அபத்தப் பண்டிகைகள், எல்லா நாட்டிலும், அந்தந்த நாட்டுப் புரோகிதக் கூட்டத்தினரால் புகுத்தப்பட்டன என்றாலும், பல நாடுகளிலே, அறிவு வளர்ச்சியின் காரணமாக, அர்த்தமற்றப் பல பண்டிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்த நாட்டில், அறியாமையும்—அந்த அறியாமையை அடிப்படையாக வைத்து ஆணை செலுத்தும் தன்மையும், போதுமான அளவுக்கு இன்னும் அகற்றப்படாத காரணத்தால், இன்றும் ஆபாசப் பண்டிகைகளில் பல நின்று நிலவுகின்றன.

தீபாவலி—இந்துக்களின் பண்டிகை; தமிழ்ப் பண்பாடு கொண்ட மக்களுக்கு—திராவிட கலாசாரங் கொண்ட மக்களுக்கு உரித்தான வொரு பண்டிகை அல்ல, வரலாற்று ஆராய்ச்சிபடி. என்றாலும், தமிழர்களிடத்திலும் —திராவிடர்களிடத்திலும் அந்தப் பண்டிகை உச்சநிலையில் வைத்துக் கொண்டாடப்படுகிறது ; காரணம், அறியாமை ! அந்த அறியாமையை அகற்றவேண்டியதே, இந்த நாட்டில், சமுதாயச் சீர்திருத்தக்காரர்களின் பெருங் கடமையாக இருந்து வருகிறது.

தீபாவலி—இந்தியத் துணைக் கண்டத்தில் இடத்திற்கு இடம் கொண்டாடும் முறையில் வேறுபாடு; கொள்ளப்படும் பொருளில் வேறுபாடு; அதற்குக் கூறும் காரணங்கள் வெவ்வேறு !

தீபாவலி என்பதற்கு, விளக்கு வரிசை (தீபம்—ஆவலி) என்று பொருள் கூறுகின்றனர். இதன்படி பார்த்தால், 'விளக்கு வரிசை' வைத்துக் கொண்டாடும் பழக்கம் வடநாட்டில்தான் இருக்கிறது. இது வட நாட்டிற்கு உரியதொரு பண்டிகையேயல்லாமல், தென்னாட்டிற்கு உரியதல்ல, என்பதை பெயரிலிருந்தே எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

தென்னாட்டில்— தமிழகத்தில், தீபாவலிக்குக்காரணமாகக், கதையொன்று கூறப்படுகிறது. ஒரு அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்க் கடலில் ஒளித்துக் கொண்டதாகவும், அதுகண்டு தேவர்கள் மகாவிஷ்ணுவிடத்தில் முறையிட்டுக் கொண்டதாகவும், மகாவிஷ்ணு பன்றி அவதாரம் எடுத்துக் கடலுக்குள் புகுந்து, அசுரனை வென்று, பூமியை மீட்டுவந்ததாகவும், பூமிதேவியின் மீது வராக மூர்த்திக்கு மனைவி — கணவன் என்ற முறையில் காதலுணர்வு தோன்றியதாகவும், அது காரணமாகப் பூமிதேவி கருக்கொண்டு அசுரனை மகனாக ஈன்றெடுத்தாள் என்றும், அந்த அசுரன் பகலும் இரவும் அல்லாத நேரத்தில் தன் தாயின் கையினாலல்லாது வேறு யார் கையினாலும் தான் கொல்லப்படக்கூடாது என்று கேட்டுக் கொண்டதாகவும், அப்படியே ஆகட்டும் என்று மகாவிஷ்ணு வரமளித்ததாகவும், அந்த அசுரன் கொடியவனாக விளங்கவே அவனைக் கொன்றுவிடவேண்டும் என்று தேவர்கள் வேண்டிக் கொண்டதாகவும், மகாவிஷ்ணு கிருஷ்ண அவதாரத்தில், தன் மனைவி பாமாவிடம், அசுரன் அவளுடைய மகன்தான் என்பதை அவளுக்கு உணர்த்தாமல், அவனைவிட்டு அம்பு எய்யச் சொல்லியதாகவும், அவளும் அம்பு எய்ய, அந்த அசுரன் "அம்மா" என்று கதறிக்கொண்டு வீழ்ந்ததாகவும், அது கேட்டு பாமா துடிதுடித்ததாகவும், கிருஷ்ணன் அவளைத் தேற்றியதாகவும், அசுரன் இறக்குந்தருவாயில் தன் பெயர் இவ்வுலகில் நீடுழிகாலம் நின்றுநிலவ வரம்பெற்றுக்கொண்டதாகவும், அசுரன் இறந்த நாளை கொண்டாடுவதேதீபாவலியாகும் என்றும், அந்தஅசுரன்தான் நரகாசூரன் என்பவனாவான் என்றும் கதை குறிப்பிடுகிறது.

இந்தக் கதைதான் தீபாவலிக்குக் காரணம் என்று கூறப்படுமானால், எவ்வளவு ஆபாசமான கதை ! இருபதாம் நூற்றாண்டில், அறிவு வளர்ந்த நாட்களில் நாகரிகமுடையோர் இக்கதையின் கருத்தை ஏற்று பண்டிகை கொண்டாடலாமா ?

அது கதையல்ல வரலாற்று நிகழ்ச்சிதான் என்று வாதிடப்படுமானால், அது ஆரிய—திராவிடப் போராட்டத்தைத் தான் குறிக்கும், திராவிடரை இழித்துக் கூறவே இப்படிப் பண்டிகை புகுத்தப்பட்டதாகும் என்று கொள்வதற்கு, வரலாற்றாராய்ச்சி சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கருத்தின்படி, திராவிடர்கள்—தமிழர்கள் இப்பண்டிகையைக் கொண்டாட சுயமரியாதை உள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியாது.

பொழுது போக்குக்காகவும், ஆண்டிற்கொருநாள் குதூகலமாக இருப்பதற்காகவுமே 'தீபாவலி' என்று, படித்த பழமைவாதிகள் கூறுவார்களேயானால், இந்த மாதிரியான ஆபாச-அபத்த-அர்த்தமற்றத் தன்மையில் கொண்டாடுவதைவிட, வேறு நல்ல அடிப்படைக் காரணங்கள் அமைந்த விழாக்கள் இருக்கின்றனவே, அவற்றைக் கொண்டாடலாமே !

தமிழகத்தைப் பொறுத்தவரையில் அறுவடை விழா என்னும் பொருள்படும் பொங்கல் விழா, மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் பெருநாளாக — அறிவுக்குப் பொருத்தமான நாளாக—இந்த நாட்டிற்கே உரிமையுடையதான நாளாக—தொன்றுதொட்டு இருந்துவரும் நாளாக இருக்கும்போது, திராவிடப் பெருங்குடி மக்கள் தீபாவலியைத் தேடி அலைவானேன் ! பொங்கல் விழாவிலே அதன் பொருளுக்கு மாறாகப் புகுத்தப்பட்டிருக்கும் சிற்சில வைதிக—அர்த்தமற்ற —இடைக் காலத்தில் நுழைந்த சடங்குகளை நீக்கிவிட்டால், அதைவிடச் சிறந்த அறிவுடம்பட்ட விழா வேறொன்று இருக்கமுடியாதே !

எதையும் நம்பி, எதையும் ஏற்றுக்கொண்டு வாழும் அறியாமை இங்கே இருக்கிறது. ஆகவேதான், பெரும்பாலான மக்களிடத்தில் 'தீபாவலி' குடியேறி இருக்கிறது. அறிவுத் தெளிவு பெற்றோர் ஆண்டுக்காண்டு இப்பொழுதுபெருகி; தீபாவலியை வெறுத்து ஒதுக்கிவருகிறார்கள். எனினும், அப்படிப் பெருகுவோரின் தொகை மிகமிகக் குறைவாகத்தானிருந்து வருகிறது. அந்தத் தொகையைப் பெருவாரியாக ஆக்க, அறிவுப் புரட்சி செய்யும் வீரர்கள் முனைந்து நின்று, அத்துறையில் போராட முன்வர வேண்டும்.

தீபாவலி, கதை என்றால்— ஆபாசமானது! வரலாறு என்றால் -அயோக்கியத்தனமானது! பண்டிகை என்றால்—அர்த்தமற்றது! பொழுதுபோக்கு என்றால் — அபத்தமானது! இந்துக்களுடையது என்றால்—திராவிடர், தமிழர்களைச் சேர்ந்ததல்ல ! இந்த நாட்டிற்குடையதென்றால் - தென்னாட்டிற்கு முக்காலும் உரிமையுடையதல்ல ! பழக்கப்பட்டது என்றால்—அறிவுக்கு ஒட்டி வராதது! எனவேதான் தீபாவலியைக் கொண்டாடாதீர்கள், அது இருபதாம் நூற்றாண்டிற்கு 'இழிவின் சின்னமாக' இருந்துவருகிறது என்கிறோம்! மக்கள் கொண்டாடுகிறார்களே என்றால்,

தீபாவலியா ? மதியீனமா ? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது !

கைத்தறித் துணிகள்

சென்னை மாகாணத்தில் மாதந்தோறும் 25 000 பேல் கைத்தறித் துணிகள் உற்பத்தியாகின்றன இதில் 4000 பேல் பாகிஸ்தானுக்குப் போவது நின்றுவிட்டது. மற்ற நாடுகளுக்கு 2000 பேல்தான் போகிறது. அரசாங்கம் வெளி நாடுகளில் இதற்கு மார்க்கட் தேடிக் கொடுத்து, மில் போட்டியினின்று கைத்தறி நெசவைக் காக்க ஏற்பாடுசெய்து, நெசவாளர்களுக்குக் கூலி விகிதம் நிர்ணயம் செய்து, கைத்தறி நெசவாளர்களிடம் வேலை வாங்கும் குட்டி முதலாளிகளும், பெரிய முதலாளிகளுமாகக் கூலியைக் குறைத்து இலாபக் கொள்ளையடிப்பதைத் தடுத்தாலொழிய நெசவாளர்களின் வறுமை விலகும்.

புதுடில்லியில் சர்வதேச புள்ளி விவரப் பயிற்சி

சென்னை அரசாங்கப் பிரதிநிதிகள் அனுப்பப்படுவர்

புதுடில்லி, அக். 16—

புதுடில்லியில் நடைபெற விருக்கும் ஷை புள்ளி விவர பயிற்சிக்கு, சென்னையிலிருந்து சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசகரான தோழர் டி. இரங்காமானுசம் எம் ஏ (கணிதம்) எம். ஏ. (பொருளாதாரம்) அவர்களும், தோழர் எச். ஜி. புன்ஜா எம். ஏ. (டிப் பொருளாதாரம்) அவர்களும் அனுப்பப்படுவார்களெனத் தெரிகிறது. இவர்களைத் தேர்ந்தெடுத்த சென்னை அரசாங்க பொருளாதார ஆலோசகரான டாக்டர், பி. நடராஜன் அவர்கள் தமது பாராட்டுதலுக் குரியவராவார் தோழர்கள் டி. இரங்காமானுசம் அவர்களும், எச். ஜி. புன்ஜா அவர்களும் முறையே தத்தம் கடமைகளைச் செய்வார்களாக. (ந-னி)

இந்தியாவின் அரசியல் வகுக்க 1½ கோடி ரூபாய் செலவு !

இந்தியாவில் 1950 ஜனவரி 26-ந் தேதி முதல் ஜனநாயகக் குடியரசு ஆட்சி நடைபெறும் இந்த அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு 1½ கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது 107 நாட்கள் சபை கூடி வேலை செய்திருக்கிறது. இந்த அரசியல் திட்டம் 386 விதிகள் கொண்ட 8 ஷெட்யூல்கள் அடங்கியதாகும்.

இந்தத் திட்டத்தில் கடவுள் பெயரையும், அவர் தோத்திரத்தையும் சேர்க்க வேண்டுமென்று ஒரு சிலர் செய்த முயற்சி பலிக்கவில்லை. காந்தியாரின் பெயரை இதில் இணைப்பதும் கூடாதென விடப்பட்டது அரசியல் சட்டத்தின் மூலம். கடவுளை மக்கள் மீது திணிக்கக்கூடாது. என முடிவு செய்யப்பட்டது.

ஈ. வெ. கி. சம்பத் வழக்கு

பெரியார் ஈ வெ. ரா, கே. ஏ. மணியம்மை ஆகிய இருவர் மீதும் தோழர் ஈ. வே. கி. சம்பத் தொடர்ந்திருந்த வழக்கு, 18-10-49ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பெரியார் சார்பில் வழக்காடிய, வழக்கறிஞர் தோழர் தாசரதி அவர்கள், பெரியார் எழுதியிருந்த கடிதமொன்றை நீதிபதி முன் படித்துக் காண்பித்தார். அக் கடிதத்தில்,

"13-7-49ல 'விடுதலை'யில் என் திருமணத்தோற்றத்திற்குக் காரணமும், அவசர முடிவும்" என்று நான் எழுதிய தலையங்கம் அன்றிருந்த நிலைமையையும், எனக்கு வந்த செய்தியையும் வைத்துக்கொண்டு எழுதப்பட்டதாகும். இப்பொழுது அந்தத் தகவல்களில் சில பாகம். அதாவது அவதூறாகக் கருதப்படுவது என்னும் விஷயங்கள், சம்பத்தைப் பொறுத்தமட்டில் உண்மையல்லவென்று அறிகிறேன்"

என்று பெரியார் எழுதியிருந்தார் தோழர் சம்பத் இதற்குத் தமது உடன்பாட்டை தெரிவித்தார். நீதிபதி எதிரிகளை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

அரைகுறை வைத்தியர்கள் 50,000 பேர்

நம் நாட்டிலே, சித்த வைத்தியம் வளராமலிருப்பதற்குக் காரணம், கடைத்தெருவில் விற்கும் வைத்திய நூல்களை வாங்கிப் படித்துவிட்டு, வைத்தியம்செய்யத் தொடங்கிவிட்ட வைத்தியர்கள் பலர் பெருகிவிட்டதே யாகும்.

இதேபோன்று, இந்திய வைத்திய முறைகளிலாயினும் சரி ஹோமியோபதி வைத்திய முறையிலாயினும் சரி, குறிப்பிட்ட அளவு தொகையைக் கொடுத்துவிட்டால், நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கிவிடும் சர்ட்டிபிகேட் கம்பெனிகள் பல தோன்றிப் பலரை வைத்திய நற்சாட்சிப் பத்திரங்களுக்குரியவர்களாகச் செய்தன. இவ்வாறு நற்சாட்சிப் பத்திரங்கள் மூலம் வைத்தியர்களாகிவிட்டவர்களின் தொகை, நாட்டில் 50 000-க்கு மேலிருக்கும் என்று தெரிகிறது.

ஹோமியோபதி முறையினைக் கையாளுபவர்களைப் பற்றிய விசாரணை நடத்திய குழுவினர், "இந்தியாவில் ஹோமியோபதி வைத்திய முறையைச் சாஸ்திர ரீதியில் சரியான பயிற்சி பெறாத ஏராளமான பேர்வழிகள் கையாண்டு தொழில்நடத்துகின்றனர். 100க்கு 90 பேர் இவ்வகையினரே. இப்போதுள்ள சுமார் 30,000 ஹோமியோபதி வைத்தியர்களுள் 5000 பேர் தவிர, மற்றையோர் ஒன்றும் அறியாதவர்களே" என்று தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இதேபோன்று சித்த ஆயுர்வேத முறைகளைக் கையாளுபவர்களிலும் பலர் இருக்கின்றனர். இவற்றையெல்லாம் அரசாங்கம் கட்டுப்படுத்தி ஒழுங்குசெய்ய முன்வர வேண்டும். போலி வைத்தியர்கள் பெருகுவது நாட்டு மக்களுக்குக் கேடு விளைவிப்பதாகும், என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். மேலும் வைத்திய முறைகளில், சித்தவைத்தியம் நமநாட்டுக்கு ஏற்றதும், மிகச் சிறந்ததுமாகையால், அதை நல்லபடி வளர்க்கவும், அதற்கெனத் தனிக் கல்லூரிகள் வைத்துத் தக்கமுறையில் மருத்துவர்களைப் பெருக்கவும், வழிசெய்ய அரசாங்கம் முன்வரவேண்டும். எவரும் மருந்துசெய்து, பத்திரிகைகளில் படாடோப விளம்பரங்கள் செய்து, பாமர மக்களை நம்ப வைத்து ஏமாற்றிப் பணம் பறிக்கும் தீய வழக்கத்தை ஒழித்து, பொதுமக்கள் உபயோகத்துக்கென வெளிவரும் ஒவ்வொரு மருந்தையும் பரிசோதித்துத் தக்கதென அனுமதிக்கும் அதிகாரமுடைய, மருத்துவ நிபுணர்களடங்கிய குழு ஒன்றை நியமித்து, அக்குழுவின் பரிசீலனைக்கு வராத எந்த மருந்தும், அக்குழுவினரின் அனுமதியில்லாத எத்தகைய மருந்தும் கடைத்தெருவுக்கு வரக்கூடாதெனத் தடை செய்யவேண்டும். இவற்றையெல்லாம் அரசாங்கம் செய்தாலொழிய, அரைகுறை வைத்தியர்கள் பெருகுவதையும், மனம்போன போக்கில் மருந்துகள் பல விற்பனைக்கு வந்துகொண்டிருப்பதையும், இதனால் மக்களின் பணமும் உடல் நலமும், பாழாகிக்கொண்டிருப்பதையும் நிறுத்த முடியாது.

காங்கிரஸ் கருதும் நாட்டு நன்மை!

பொதுமக்கள் சேவைக்கு இன்றைய ஆட்சி தரும் சான்று

"நாட்டின் நன்மையே காங்கிரசின் லட்சியம். பதவிப்பித்தன்று. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் காங்கிரஸ் அரசாங்கம் நிர்வாகம் நடத்தவில்லை. பொதுமக்களுக்குச்சேவைசெய்யவேபோட்டியிடுகின்றனர்."

என்று செம்பியத்தில் பேசியுள்ளார் தோழர் காமராஜர்.

காங்கிரசின் லட்சியங்கள் எத்தகையவை என்பதை அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபியே நன்கு தெளிவாக விளக்கிவிட்டிருக்கிறார்— கான்பூர் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், "காங்கிரஸ் லட்சியங்கள் என்றோ முடிந்தால் நிறைவேற்றப்படவேண்டியவை. அவற்றை நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலைக்கூடக் காங்கிரஸ்காரர்களுக்கு இல்லை. அதற்காக எவரேனும் முயல்கின்றனரா என்பதே கேள்விக்குரியதாகும்" என்று தெளிவுப்படுத்திவிட்டார் தோழர் பட்டாபி. அங்ஙனமிருக்க, அந்த லட்சியத்தைப்பற்றி, மீண்டும் காமராஜர் பேசுவது, ஏமாற்றுவித்தையேயன்றிவேறில்லை.

காங்கிரஸ்காரர் ஆட்சி நடத்துவது பதவிப்பித்தாலன்று, அதிகார வெறியாலன்று, பொதுமக்கள் சேவைக்கே என்று தோழர் காமராஜர் கூறுவது உண்மையென்றால், இலஞ்ச ஊழல்கள் மலிந்திருப்பானேன்! கள்ள மார்க்கெட் அகற்ற முடியாததாக இருப்பானேன்! அமைச்சர்கள் பெருந்தொகையைச்சம்பளமாகப்பெற்றுச் சுற்றுப் பிரயாணப்படிச் செலவு வேறு வாங்குவானேன்? சட்டசபை உறுப்பினர்கள் சம்பளம் வேறு படிச் செலவு வேறு எனப் பெருந் தொகையைப் பெறுவானேன்? நாட்டில் பொருளாதார நெருக்கடி சகிக்க முடியாத அளவுக்குப் பெருகியிருக்கும் நிலையில், பொதுமக்கள் சேவை ஒன்றையே கருத்தில் கொண்டு ஆட்சி புரியும் இவர்கள் இவ்வாறு பொதுப்பணத்தை ஊதியமாகப் பேரளவில் பெறுவானேன்? பொதுமக்கள் சேவை என்பதன் கருத்து இதுதானா!

காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்து இத்தனை ஆண்டுகளாகியும் பஞ்சத்தை நாட்டைவிட்டு விரட்ட முடியவில்லையே! ஏன்? வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கியிருக்க, அந்த முறை நடைமுறையில் வராமுன்னரே ஜில்லா போர்டு தேர்தல்களை நடத்தினார்களே அது ஏன்? பொது மக்களின் பேச்சுரிமை, எழுத்து உரிமை குலைக்கப்படுகிறதே அது ஏன்? போர்க்காலத்தில்கூட, வெள்ளையர்கள், கூட்டம்போடத்துணியாத அளவில், நீதிமன்றம் தலையிட முடியாத வகையில், பொதுஜன அமைதிப்பாதுகாப்புச் சட்டம் என்னும் கருவியைத் தயார் செய்து வைத்துக்கொண்டு, அதன்மூலம் சர்வாதிகார ஆட்சி செய்யவேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டதே காங்கிரஸ் தோழர்களுக்கு! அது ஏன்?

இவை பொதுமக்கள் சேவையா? பொதுமக்கள் சேவை என்பதற்குரிய பொருள் இதுதானோ? அல்லது இவை, காங்கிரஸ்காரர்கள் ஆளும் திறமையை விளக்கும் நெறிகளா? "வெள்ளையர்கள் கறுப்புச்சட்டைக்காரர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தால் இரண்டு நாளைக்குக்கூட ஆட்சி செய்திருக்கமாட்டார்கள்" என்று தோழர் காமராஜர் கூறுகிறார். ஆம்! உண்மைதான்! இவ்வாறு இன்று காங்கிரஸ்காரர்கள் நடத்துவதுபோன்ற ஆட்சியை இரண்டு நாளைக்குக்கூடத் திராவிடர்கள் நடத்தமாட்டார்கள்! கூடியவரையில் மக்கள் நலன் பெறக்கூடியவரையில் நல்லாட்சி நடத்தவே முயன்றிருப்பார்கள்!

ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய வாறுள்ள வரிகளை மேலும் மேலும் போடாமல், செல்வர்களின் நிதியிலிருந்து பணம் அரசாங்கத்துக்குக் கிடைக்குமாறு திராவிடர்கள் செய்திருப்பார்கள்; முதலாளிகள் மனம் நோவப்படாதெனக் கருதித் தொழிலாளரைத் துன்பத்திற்குள்ளாக்கும் முறையைக் கைக்கொள்ளாமல், முதலாளிகளின் இலாபத்தில் தொழிலாளரும் பங்குபெறச் செய்திருப்பார்கள். நாட்டில் கோயில்களில், மடங்களில் முடங்கிக்கிடக்கும் பெருவாரியான சொத்துக்களைப் பொதுமக்கள் நலன்களுக்கான வழிகளில் முதலீடு செய்திருப்பார்கள். எந்த வயதிலும் எவரும் எத்தகைய கல்வியையும் பெற வசதிகளைச் செய்திருப்பார்கள். வடநாட்டாரிடம் பிடியைக் கொடுத்துவிட்டு, அவர்களிடம் மடிப்பிச்சை கேட்டுக்கொண்டிராமல் முக்கியமான உரிமைகளைப் போராடியேனும் பெற்று உரிமைகளை இழவாதிருந்திருப்பார்கள். உணவுக்காக பர்மா, சியம், இந்தோசியம் போன்ற நாடுகளில் மத்திய அசராங்கத்தைப் பணியவைத்தோ, இணங்கச்செய்தோ நேரடியாக அரிசியைப் பெற முயன்று, அதேசமயத்தில் நாட்டில் உள்ள பயிரிடக்கூடிய நிலங்கள் அனைத்தையும் ஒ[illegible]க்கரும் வீணாகக் கிடக்காதபடி பயிர் விளையச் செய்திருப்பார்கள். புதிய தரிசு நிலங்களைச் செப்பனிட்டு, வேலையில்லாத மக்கள் பலரைப் பயிர்த் தொழிலில் ஈடுபடுத்தி அதிக விளைச்சலுக்கு வழி செய்திருப்பார்கள்- உடைகளைப் பெருக்கவும், புதிய கட்டிடங்கள் பல, குறைந்த செலவில் கட்டும் முறையைக் கைக்கொண்டாவது கட்டவும் முயன்றிருப்பார்கள். நம் நாட்டு உற்பத்திப் பொருள்கள் தாராளமாகப்பிறமாகாணங்களுக்குப்போய் விற்பனையாகுமாறு ஏற்றுமதி வரிகள், பிற நிபந்தனைகள் எதுவுமில்லாதபடி செய்திருப்பார்கள். பிறநாட்டுப் பொருள்களுக்கு இறக்குமதிவரி விதித்துநம்நாட்டு உற்பத்தியைக் காக்கத் திட்டமிட்டிருப்பார்கள். இலஞ்சஊழல் கள்ள மார்க்கெட், முதலியவைகளை எவர் காரணமாயிருந்தாலும் தயவு தாட்சண்யமின்றிக் கடுந்தண்டனைகளுக்குட்படுத்துவதன் மூலம் ஒழித்திருப்பார்கள். மக்கள் நலனுக்கான இன்னும் பலப்பல வற்றைச் செய்திருப்பார்கள் என்பதைத் தோழர் காமராஜர் உணர்வாரா? கட்சி போதையைக் கைவிட்டு, நிலைமையை உள்ளபடி கவனித்தாரானால், காங்கிரஸ்காரர்களின் பொதுமக்கள் சேவை என்பது வெறும் பகட்டுப் பேச்சு என்பது அவருக்கே நன்கு விளங்கிவிடும். ஆனால் தம் வீட்டுக் குறையைத் தாமே சொல்லும் துணிவுடையவரல்லரே, தோழர் காமராஜர்!

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம்

ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

கவர்னர் கண்ட காட்சி!

"நீர் இந்தத்தொழிற்சாலையில் எவ்வளவு காலமாக வேலை செய்து வருகிறீர்?"

"40 ஆண்டு சேவைசெய்து வருகிறேன். எனக்கு 8 குழந்தைகள் இருக்கின்றன. மாதச் சம்பளம் எழுபதே ரூபாய். இதைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியவில்லை அரசாங்கம் ஆதரவு தர வேண்டும்."

இது கதையல்ல; நமது சென்னை கவர்னர் பெருமான் கண்ட காட்சி! கேட்ட செய்தி!

அண்மையில் சென்னைக் கவர்னர் பொன்மலைத் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தபோது, தொழிற்சாலையைப் பார்வையிட்டு வரும்போது, ஒரு தொழிலாளியைப் பார்த்து கேட்ட கேள்வியும், அதற்கு அந்தத் தொழிலாளி அளித்த பதிலுமே மேலே தரப்பட்டுள்ள செய்தியாகும்.

இச் செய்தி தொழிலாளரின் துயரத்தை விளக்க சரியானதோர் எடுத்துக்காட்டு. இக் காட்சியைக் கண்ட கவர்னர் "எல்லாவற்றையும்" கவனிப்பதாக வாக்களித்தாராம.

கவர்னரே நேரில் காட்சியைக் கண்டதால், தொழிலாளர் துயர் துடைக்க அரசியலார் முயல்வார்களாக.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

திருப்பூர், அக். 11—

திருப்பூர் நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், 2-10-49-ல் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் அமைக்கப்பட்டுக் கீழ்க் கண்ட செயற் குழுவினர் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:—எ. அரசன், துணைச் செயலாளர்:—எம். என். அண்ணு; பொருள் உறுப்பினர்—க. ச. சுந்திரம், விளம்பர உறுப்பினர்-முக்கண்ணன். ஏனைய செயலுறுப்பினர்கள்-ச. தி. மயிலழகன், சு. உலகநாதன், சி. வேலுதாசன், கி. வளவன், சி. செழியன், தி. ப. சேரமான், தி. அ. வள்ளுவதாசன், வி. சாமிநாதன். மேலும் எழு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளச் செயலாளருக்கு உரிமை வழங்கப் பட்டது. பின்பு தோழர் வேலுதாசன் தலைமையில், தோழர் இளங்கோ "மாணவர் கடமை" என்பது குறித்து சொற்பொழிவாற்றினார். இறுதியில் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. எனத் துணைச் செயலாளர் எழுதுகிறார்.

அறிஞர் அண்ணாத்துரை திராவிட முன்னேற்றக் கழகம்

தூத்துக்குடி, அக். 10—

தூத்துக்குடி, மேலூர் தளபதி அண்ணாத்துரை திராவிடர் கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் 9-10-49-ல் தோழர் தி. வயணப் பெருமாள் தலைமையில் நடைபெற்றது அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஷை கழகம் அறிஞர் சி. என். அண்ணாத்துரை திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றியமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- தி. வயணப்பெருமாள்; துணைச்செயலாளர்- ஜே. ராசமணி; நிதி உறுப்பினர்- க. கருப்பசாமி; விளம்பர உறுப்பினர்- க. வீரபாகு. ஏனைய செயற்குழுவினர்:— சுப்பையா, வே. அப்பாத்துரை, ஆ. அருணாசலம், த. சண்முகய்யா, ஆர். நவமணி, சி. ராசபாண்டியன், எஸ். ஆர். ஆதிலிங்கம், அ. அருணாசலம், க. முருகையா, ந. கிட்ணன், செம்புலிங்கம், ச. கா. வெள்ளைச்சாமி, நீதிராசன், கி. பொன்னுச்சாமி, சி. வெள்ளையப்பன். என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

ஏழை நாட்டில் ஏன் இந்தப் பகட்டுவாழ்வு?

தியாகத்தின் பொருள் இதுதானா?

அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர்களுக்கு, நாளொன்றுக்குப்படிச்செலவு, ரூ. 45 ஆக இதுவரை இருந்தது இப்போது சென்னை அங்கத்தினர். தோழர் முனிசாமிப்பிள்ளையின் முயற்சியால் ஐந்து ரூபாய் அதில் குறைந்தது. இச்சபை அங்கத்தினர்களுக்கு முதல் வகுப்புப் பிரயாணவசதி.

நம்நாடு இன்னும் ஏழ்மை நிலையை விட்டு, பஞ்சப் பிணியிலிருந்து அகலவில்லை. உணவுப் பஞ்சம், உடைப்பஞ்சம், இடப் பஞ்சம், வேலையில்லாபபஞ்சம் என்லெல்லாம் மக்களைப் பஞ்சப் பேயமிரட்டிக்கொண்டிருக்கிறது. இப்பஞ்சப் பேயை விரட்ட அரசாங்கத்திடம் பணமில்லை. மத்திய அரசாங்கமோ உலகபாங்கில் கடன் வாங்கியும் பட்டினி கிடக்கும் நிலையில் இருக்கிறது. சென்னை மாநில அரசாங்கமோ, வருவாய்க்குறைவான நிதி நிலைமையுடையது என்று நிதி அமைச்சர் கூறுகின்றார். பொதுவாக நாட்டின் நிலை இவ்வாறு இருக்கையில், ஒரு நாளைக்கு ரூ 40 படிச் செலவேன்? முதல் வகுப்பில் பிரயாணமேன்? நாட்டுக்குழைக்கும் தியாகிகளா பஞ்ச நிலையிலுள்ள நாட்டிலிருந்து இவ்வளவு பணம் பெறுவது? நாட்டு நலன் ஒன்றையே மனத்திற்கொண்டு காந்தீயத்தைக் கடைப்பிடிப்பவர்கள் இந்தப் பகட்டுவாழ்க்கையைமேற்கொள்ளலாமா? வேண்டாமென உதறியிருக்கவேண்டாமா? இதே போல, சென்னை மாகாண அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் ஊதியம் பெறாமல் உழைக்க முன்வந்திருக்க வேண்டும். இதுவரை அவ்வாறு செய்யாவிடினும், நாட்டின் பொருளாதாரச் சங்கடத்தையும் ஏழைமக்கள் நிலையையும் மனத்திற்கொண்டு இனியாவது அவ்வண்ணம் செய்ய முயலுவார்களா?

மதம் மக்களை ஒன்றுசேர்க்கவில்லை

கோவையில் நடந்த செ[illegible] மாநிலச் சமூக ஊழிய[illegible] மாநாட் தலைமைவகித்துப் [illegible] டாக்டர் சி. ஆர். ரெட்டி, [illegible] ஓரளவிற்கு நன்மைகள் புரிந்தி[illegible]ருக்கின்றன வென்றாலும், மக்[illegible] ஒன்று சேர்த்திருக்கிறது என்[illegible] கூறிவிட முடியாதென்பதை எடு[illegible]த்துக் காட்டியுள்ளார்.

டாக்டர் சி. ஆர். ரெட்டி கல்வித் துறையில் நீண்ட காலப் பட்டறிவு உடையவர், சிறந்த அறிஞர். அவருடைய ஆழ்ந்த அனுபவத்தின் முடிவு, மதம் மக்களை ஒற்றுமை[illegible]படுத்துதற்குரிய கருவி அன்றென[illegible]பது. இவருடைய அறிவுரை, சென்னை மாநிலப் பள்ளிகளில் மதக்கல்வி போதிக்க வேண்டுமென்று கூறுபவர்களுக்கும், மத போதனைகளுக்கு ஆதரவு காட்டிப் பேசிவரும் கல்வி அமைச்சருக்கும் விழிப் பூட்டுமா?

மதங்களினால் ஏற்படும் தொல்லைகளைக் கண்ணாரக் கண்டும், மேலும் மேலும் நாட்டிலே மத போதனைகளைப் புகுத்துவதற்குச் சிந்தனையுள்ள எவரேனும் விருப்பங்கொள்வாரா? எனவே, டாக்டர் சி. ஆர். ரெட்டியின் கருத்துப்படி, மதம் ஒற்றுமையைவளர்க்காதாகையால, கல்வி நிலையங்கள் எதிலும், அது ஆரம்பப் பள்ளியாயினும் உயர்நிலைப் பள்ளியாயினும், கல்லூரி கலாசா[illegible]லைகளாயினும் மதபோதனையே கூடாது என்று அரசாங்கம் கட்டளைப் பிறப்பிக்க முன்வரவேண்டுகிறோம். மக்கள் ஒற்றுமை அடைந்து, அறிவைப் பயன் தரும் வழிகளில் செலுத்த வேண்டுமானால், மதபோதனைகைவிடப்பட்டு, அந்த எண்ணத்தையே மக்கள் மனத்தை விட்டகற்றி, அறிவைப் பரப்பவேண்டும். சிந்தனை சக்தியை மக்கள் பெறுமாறு செய்யவேண்டும்.

பீகார் செய்தது - சென்னை செய்ததா?

பீகார் மாகாணத்தில 5 மாத காலத்தில்-1949 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதத்திற்குள்—3327 சில்லறை நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேலை மாகாண முழுவதற்குமெனத் திட்டமிடப்பட்டு, அது விரைவு படுத்திப் பணியாற்ற வேண்டிய திட்டமென முடிவு செய்யப்பட்டது. இந்த விரைவுத் திட்டத்தை மேற்கொண்ட அரசாங்கம், இதற்கென (1949-50-க்கு) ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயில, 49 லட்சம் ரூபாயை மட்டும் செலவு செய்து வேலையைத் திறமையாக முடிவுபெறச் செய்துள்ளது. என அறிவிக்கப்படுகிறது.

உழவுத் தொழில் சிறப்புற, பயிர் விளைவு பெருக, நீர்ப்பாசன வசதிகள் நல்லமுறையில் இருத்தல்வேண்டும். இதை எண்ணியே பீகார் அரசாங்கம் 5-மாதத்திற்குள் இந்த உயிர்நாடி வேலையைத்திறம்பட முடித்திருக்கிறது.

சென்னை மாநிலம், இப்போது பற்றாக் குறைப் பகுதியாகக் காட்சியளிக்கிறது. உணவுப் பஞ்சம் இந்த நாட்டிலே தீர்ந்தபாடில்லை. பல தரிசு நிலங்களைப் பயிர் செய்யக்கூடிய நிலங்களாக்க, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க வேண்டிய இன்றியமையாத நிலைமையில இருப்பது நம் நாடே. சென்னை அரசாங்கம் பீகாரைப் போன்று நீர்ப்பாசன விரைவுத் திட்டங்கள் வகுத்து, அவற்றைச் சரியான முறையில் நடத்தி வைத்து, உழவுத்தொழிலைப் பெருக்கினால், நம் நாட்டு விளைவைப் பெருக்கலாமன்றோ! நம் நாட்டமைச்சர்கள் இத்தகைய வேலைகளில் மிகுந்த கவனம் செலுத்திப் பணியாற்றினாலன்றி மக்கள் வாழ்வு பலனுடையதாக இருக்க முடியாது!

சந்தா விவரம்

20—10—49 முதல்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

—மானேஜர்

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

..லபாறை—சிற்றூர்க்கிளை

வால்பாறை, அக். 11—

இவ்வூரில் 9-10-49 அன்று ..டைபெற்ற அமைப்புக்கூட்டத் ..ில், "திராவிட முன்னேற்றக் கழ ..ம்—வால்பாறை சிற்றூர்க்கிளை" ..ப்பட்டது. ஓர் புதிய செயற் ..வும் தேர்தெடுக்கப்பட்டது.

..சயலாளர்:— ஜே. சுந்தராஜ்; ..உறுப்பினர்:—பி. மகமது; ..ம்பர உறுப்பினர்:— எஸ். வி. ..வின்சென்ட். ஏனைய செயற்குழு ..னர்:—ஏ. ஆர். அமில்ராஜ், டி. ஜெயராஜ், கே. மாரியப்பன், எல். ..டானியல், கிருஷ்ணன், கருப் பணன், பாமன். பின்பு செயலாளர் முடிவுரை கூறக்கூட்டம இனிது முடிவுற்றது. என விளம்பர உறுப் னபிர் வரைகிறார்.

* * *

..ருஷ்ணகிரி—நகரக்கிளை

கிருஷ்ணகிரி, அக். 11—

இவ்வூர் குறள் நூல்நிலயத்தில் 10-10-49ல் நடந்த அமைப்புககூட் ..த்தில் "திராவிட முன்னேற்றக் ..ழகம்—கிருஷ்ணகிரி நகரக்கிளை" அமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட் ..டது.

செயலாளர்:— கே. எஸ். ஆர். அன்வர்கமால்; துணைச்செயலா ளர்:—எம. ஏ. மகமது சாலியார்; பொருள் உறுப்பினர்:—ஆர். கேச வன்; விளமபர உறுப்பினர்:— எம். சந்திரன்.

மற்றுள்ள செயற்குழுவினர்:— டி. வி. இராமசசந்திரய்யா, கே. எஸ். ஆர். பாரி, டி. எஸ். மண வழகன், ஏ. ஆர். அப்துல்சலீம், ..ம். அசுவத்தன், கே. லோக ..தன். மேலும் இரு உறுப்பினர் களைச சேர்த்துக்கொள்ளத் தீர் மானிக்கபபட்டது. என விளம்பர உறுப்பினா தீட்டுகிறார்.

* * *

பட்டமுடையார்புரம்— சிற்றூர்க் கிளை

பட்டமுடையார்புரம், அக். 12—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூடடம 11-10-49-ல் தோழர் சந் தணம அவர்கள் இல்லத்தில் நடை பெற்றது. தோழர் மு. வை. செழி யன் தலைமை தாஙகினர். அது பொழுது பின்வரும் செயற்குழு வினா தேர்ந்தெடுககபபட்டனர்.

செயலாளர்-ந. சந்தனம்; துணைச் செயலாளர்கள்- நா. மு. முத்து, மா. தவசுமுத்து; நிதி உறுப்பினர்- மு. வை. செழியன்; விளம்பர உறுப்பினர்- நா. சு. இளஙகோ. ஏனைய செயலுறுப்பினர்கள்:— நா. ஞானசுந்தரம, நா. அய்யா துரை, முருகாண்டி, சு. நடராசன், மா. திரவியம், வை. பொன்னையா, மு. சண்முகம். பிறகு செயலாளர் நன்றிகூறக கூட்டம் இனிது முடி வடைந்தது. எனத் தோழர் நா. சு. இளஙகோ (வி. உறுப்பினர்) அறி விக்கிறார்.

* * *

திண்டிவனம்—நகரக்கிளை

திண்டிவனம், அக். 14—

இந்நகரில் 9-10-49-ல் தோழர் தே. ச. அப்பாண்டநாதன் அவர் கள் தலைமையில் நடைபெறற அமைப்புக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்— திண்டி வனம் நகரக்கிளை" நிறுவப்பட்டு, அடியிற்கண்டபடி செயற்குழு தேர்ந்தெடுககப்பட்டது.

செயலாளர்:- சி. பாண்டுரங்கன்; துணைசெயலாளர்- வ. தஙகவேல்; நிதி உறுப்பினர்—தே. செ. அப் பாண்டநாதன்; விளம்பர உறுப் பினர்-இ. க. குமாரசாமி. மற்று முள்ள செயலுறுப்பினர்கள்:— துளசிஙகம், தி. ஆதிகேசவன், பால கிருட்டினன், கே. என். குப்பு சாமி, எஸ். நடராசன், ஆறுமுகம. மேலுமொரு தீர்மானம் நிறைவேற் றப்பட்டு, நன்றிகூறலுடன் கூட் டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

இனும்ரெட்டியப்பட்டி— சிற்றூர்க் கிளை

இனும்ரெட்டியப்பட்டி, அக். 14—

இவ்வூர் திராவிடர் கழக செயற் குழுக் கூட்டம், தோழர் ஏ. எஸ். ஏ. சாமி அவர்கள் தலைமையில், 9—10—49 ஞாயிறு மாலை 5-மணிக்குக் கூடியது. அப்பொ ழுது, இவ்வூர் தி. கழகம் "திரா விட முனனேற்றக் கழகம்—இனும் ரெட்டியப்பட்டி சிறறூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக் கீழ்க் கண்ட செயறகுழுவும் தேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—க. சின்னச்சாமி; பொருள் உறுப்பினர் :—ஏ. எஸ். ஏ. சாமி; விளம்பர உறுப்பினர்:— கு மாரகதஒளிவு. ஏனைய செயற் குழுவினர் :— பெ. கருப்பையா, சா. தமிழரசு, பு. க. மாரியப்பன், மு. மாரியசிஙகம், க. ஆசீர்வாதம, வெ. அய்யாசசாமி, மு. பாலையா, வெ. பொன்னுசசாமி. எனத் தோழர் க. சின்னசசாமி (செயலா ளர்) தெரிவிக்கிறார்.

* * *

தவுட்டுப்பாளையம்—சிற்றூர்க்கிளை

தவுட்டுப்பாளையம், அக். 14—

இவ்வூர் தி. மு. கழக அமைப் புக்கூட்டம், தோழர் சி.எம். காதா பாட்சா அவர்கள் தலைமையின் கீழ் 9-10 49ல் நடைபெறறது. அது போது "திராவிடமுன்னேற்றக்கழ கம்—தவுட்டுப்பாளையம் சிறறூர்க கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயற குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்:— டி. பி. மூர்த்தி; துணைச்செயலாளர்:-பொ. மாரியப் பன்; நிதி உறுப்பினர்:—சி. எம். காதர்பாட்சா; விளம்பர உறுப்பினர் கள்:—அப்துல்அமீது, சி. முத்து. ஏனைய செயலுறுப்பினர்கள:—டி. ஆர். மதுரநாயகம், ரா. இராச மாணிக்கம், ஜி. நாசிம்மன், எம். காமாட்சி. மேலும் தேவையான செயற்குழுவினரைத் தேர்ந்தெடுத் துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட் டது.எனத்தோழர் அப்துல் ஹமீது (வி. உறுப்பினர்) அறிவிககிறார்.

* * *

கொடுமுடி—சிற்றூர்க் கிளை

கொடுமுடி, அக். 14—

இவ்வூர் 12-10-49 அன்று திரா விட இயக்க அன்பாகனால், "திரா விட முன்னேறறக்கழகம்—கொடு முடி சிறறூர்க்கிளை" நிறுவப்பட்டு ஓர் புதிய செயற்குழுவும் அமைக் கப்பட்டது.

செயலாளர்:— ரா. பிச்சன்; துணைசெயலாளர்:— சி. சொக்க லிஙகம்; பொருள் உறுப்பினர்:-சின் னுச்சாமி; விளம்பர உறுப் பினர்:—பு. பொ. கருப்பண்ணன். ஏனைய செயலுறுப்பினர்:—கருப் பண்ணன், கே. சுப்பிரமணியம், எஸ். வேம்பு, என். சண்முக சுந்த ரம், சி. அய்யாசாமி. பிறகு செய லாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. என விளம் பர உறுப்பினர் தீட்டுகிறார்.

* * *

மதுராந்தகம்— நகரக் கிளை

மதுராந்தகம, அக். 14—

இவ்வூர் தி. மு. கழக அமைப் புக் கூடடம் "தீ" ஆசிரியர் தோழர் பத்மன்செல்லப்பன் அவர்கள் தலைமையில் 14-10-49 ல் நடை பெற்றது. அது பொழுது தோழர் பட்டுககோட்டைத் திருநாவுககரசு பாரதிதாசன் பாடல்பாட, தோழர் பத்மன்செல்லப்பன் அவர்களால் தி. மு. கழகக் கொடி உயர்த்தப் பட்டு, தோழர் சி. என். அண்ணாத் துரை அவர்களின் உருவப் படமும் திறக்கப்பட்டது. பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம—மதுராந் கம் நகரக்கிளை" நிறுவப்பட்டது. புதிய செயற்குழுவொன்று அமைக்கப் பட்டது.

(தற்காலிகச்) செயலாளர் :— எம். எம். இராசாபாதர்; துணைச் செயலாளர்-சி. வி. இரத்தினவேல்; பொருள் உறுப்பினர்-எம். கே.முஸ் தபா; விளம்பர உறுப்பினர்-பி. சிவாநந்தம். ஏனைய செயலுறுப் பினர்கள்:-கே. திருநாவுக்கரசு, டி. கன்னியப்பன், கே. ஏ. நந்தன், முனுசாமி, ஏ. ஆறுமுகம், எம்.கே. அல்லாபகஷ். எனத் தோழர் சிவா நந்தம் (வி. உறுப்பினர்) எழுது கிறார்.

* * *

பெத்தநாடார்பட்டி--சிற்றூர்க்கிளை

பெத்தநாடார்பட்டி, அக். 14—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம 13—10—49 ல் தோழர் களஞ்சியம் தலைமையில் கூடியது. தோழர் வி. எஸ். வி. தஙகத்துரை, துவக்க இசை பாடினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்— பெத்தநாடார்பட்டிச் சிற்றூர்க கிளை" நிறுவப்பட்டுப் பின்வரும் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட னர்.

செயலாளர்:—வி. எஸ். வி. தங் கத்துரை, துணைச் செயலாளர்:— சூசமரியான்; நிதி உறுப்பினர்:— பி களஞ்சியம்; விளம்பர உறுப் பினர்-பாலகுருசாமி. பின்பு ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக் கப்பட்டனர். தலைவர் முடிவுரைக் குப்பின், தோழர் இராஜேந்திரன் நன்றி கூறக், கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் பாலகுருசாமி (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

சின்னமனூர் கருங்கட்டாங்குடி— சிற்றூர்க்கிளை

சின்னமனூர், அக். 14—

"திராவிட முன்னேறறக்கழகம்- சின்னமனூர் கருஙகட்டாங குடிக் கிளை" 14—10—49 ல் இவ்வூர்த் தோழர் பி. வி. எம். ஹைத்தரூஸ் அவர்கள் தலைமையில் கூடிய கூட் டத்தில் நிறுவப்பட்டது. அது போது ஓர் புதிய செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-ஆ. சுப்பிரமணியம்; நிதி உறுப்பினர்:- கு. வெ. இராம சாமி; விளம்பர உறுப்பினர்—மூ. கிருட்டினன். ஏனைய செயலுறுப் பினர்கள்-இரா. சுப்பையா, எஸ். நாகராஜன், பா. சோமசுந்தரம், கோ. அழகர்சாமி. எனத் தோழர் எம். கிருட்டினர் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

புதுப்பட்டினம்—சிற்றூர்க்கிளை

புதுப்பட்டினம், அக். 14—

தோழர் ஆர். கே. பி. பிச்சைக் கண்ணு அவர்கள் தலைமையில 13—10—49 அன்று கூடிய கூட் டத்தில் இவ்வூர் திராவிடர் கழகம கலைக்கப்பட்டு "திராவிட முன் னேற்றக் கழகம் — புதுபட்டினம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. ஓர் புதிய செயற்குழுவும் தேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— எஸ். முருகை யன்; நிதி உறுப்பினர்:— ஆர். குரு சாமி; விளம்பர உறுப்பினர்:— டி. வி. நடராசன். ஏனைய செயலுறுப் பினர்கள்:— ஆர். கே. பி. பிச்சைக் கண்ணு, ஏ. அருமைக்கண்ணு, என். சித்தையன், கே. சின்னசாமி, எம். அருணசலம், ஆர். கே. பி. ராமசாமி, எஸ். குழந்தை, கே. கோவிந்தசாமி. பின் நன்றி கூற லுடன் கூட்டம் முடிந்தது. எனத் தோழர் டி. வி. நடராசன் (வி.உ) எழுதுகிறார்.

* * *

கொமரபாளையம்—சிற்றூர்க்கிளை

ப. கொமாபாளையம், அக். 14—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம், தோழர் ஏ. இராஜ கோபால் அவர்கள் தலைமையில் 11—10—49 அன்று நடைபெற் றது. அதுபோது "திராவிட முன் னேற்றக் கழகம் ப. கொமரப்பாளை யம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக், கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:-க.வே.ராசன்னன்; துணைச் செயலாளர்:— கே. ஏ. பழனியப்பன்; விளம்பர உறுப் பினர் :— ஏ. இராசகோபால். ஏனைய செயலுறுப்பினர்கள்:— வி. கோபால், நா. ரெகுராம், ஏ. ரஙகசாமி, எஸ். ஏ. சின்னு. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

துறையூர்—நகரக்கிளை

துறையூர், அக். 14—

இந்நகரத் திராவிடர் கழகப்பேர வைக் கூட்டம், துணைத்தலைவர் தோழர் கூ. ரா. ஏகாம்பரம் அவர் கள் தலைமையில் 12-10-49ல் கூடி டி தி. கழகத்தை "திராவிட முன் னேற்றக் கழகம்- துறையூர் நகரக் கிளை" என மாற்றியதாகத் தீர்மா னித்தது. மேலும் நகர தி. கழகப் பொருள்கள், நிதி ஆகியவற்றை தி. மு. கழகத்திற்கு மாற்றிவிட்டதாக வும், இத்தீர்மானப்படி டிபொருள் களை ஒப்புவிக்கும்படித் தோழர்கள் து. மா. பெரியசாமி (முன்னாள் செயலாளர்), கி. கு. கிருஷ்ணசாமி ஆகியவர்களைக்கேட்டுக் கொண்டும தீர்மானிக்கப்பட்டதோடு, மேலும் சில தீர்மானஙகளும் நிறைவேற்றப் பட்டன. பின்பு செயற் குழு வொன்று அமைக்கப்பட்டது.

செயலாளர் :— டி. பி. அழக முத்து; பொருள் உறுப்பின்ர்:— பாலசுந்தரம; விளம்பர உறுப்பி னர்:—ஆர். சுப்பிரமணியம்; மற்று முள்ள செயலுறுப்பினர்கள்:—கூ. ரா. ஏகாம்பரம், ஜி. வேணு, கே. லட்சுமணன், சி. சபாபதி, இன் னும் நான்கு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள டி குழுவிற்கு உரிமை வழஙகப்பட்டது. திருச்சி மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் டி. பி. அழகமுத்து, கூ.ரா. ஏகாம்பரம் ஆகியோர் தேர்ந் தெடுக்கப்பட்டனர். கூட்ட ஆரம் பத்தில் தோழர்கள் சி. நடராசன், டி. கே. ஆர். சுந்தரமூர்த்தி ஆகிய இருவரும் "துணைத்தலைவர் இககூட் டததைக் கூட்டஅதிகாரம் இல்லை" "முன்னேற்றக்கழகமாக மாற்றக கூடாது" என்பதாகக் கொண்டு வரப்பட்ட மறுப்பை ஒருவரும் ஆத ரிக்காததால், அவர்கள இருவரும கூட்டத்தைவிட்டு வெளியேறினர். எனத்தோழர் ஆர். சுப்பிரமணியம (வி-உ) அறிவிககிறார.

* * *

சந்நாசி நல்லூர்—சிற்றூர்க்கிளை

சந்நாசி நல்லூர், அக். 15—

இவ்வூர் தி. மு. கழக அமைபபுக் கூட்டம, 14-10-49 இரவு, தோழர் வணஙகாமுடி அவர்கள் இல்லத்தில் நடை பெற்றது. அது பொழுது "திராவிட முனனேற்றக் கழகம— சந்நாசி நல்லூர் சிற்றூர்ககிளை" நிறுவப்பட்டுக கீழக்கண்ட செயற் குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இரா. கிருஷ்ண மூர்த்தி, பொருள் உறுப்பினர்:— கு. அரஙகசாமி; விளமபர உறுப் பினர்—இரா. அரஙகசாமி. ஏனைய செயற்குழுவினர் :—ம. குப்புசாமி, க. வடிவேல், ச. தியாகராசன், பெ. வணஙகாமுடி, இரா.பொன்னு சாமி, ச. இளமவழுதி. மேலும் சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு தோழர் வணஙகாமுடி கழ கக் கொள்கைகளை விளக்கிப் பேசி னார். சில தீர்மானஙகள் நிறைவேற் றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் இரா. அரஙகசாமி (வி. உறுப்பினர்) அறிவிககிறார்.

* * *

சேலம் குகை—நகர உட்கிளை

குகை (சேலம்), அக். 15—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம 14—10—49ல "தேவன் பிக்சர்ஸ்" கட்டிடத்தில், தோழர் வி. நமசிவாயம பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறறது. அப் பொழுது தோழர் ஸ்டாலின் கே. ராமசாமி தி. மு. க. கொள்கை களைக குறித்துப் பேசினார். பின்பு "திராவிட முனனேற்றக் கழகம— சேலம நகர குகை உட்கிளை" நிறு வப்பட்டுப் புதிய செயறகுழு வொன்று தேர்ந்தெடுககப்பட்டது.

செயலாளர்:-பி. வெஙகட்ராமன், துணைசெயலாளர்:—பி. கோவிந்த சாமி; பொருள் உறுப்பினர்:—ஏ. தாசப்பன்; விளம்பரஉறுப்பினர்:— டி. ஒபுளிசாமி. மற்றுமுள்ள செயற் குழுவினர்:—எம். நாராயணசாமி, டி. சீதாராமன், பி. சென்ராயன், ஓ.ஜி. சனார்த்தனம், ஓ. எஸ். ராம லிஙகம், எம். பி. மீனாட்சிசுந்தரம், சி. பாலகிருஷ்ணன், ஏ. சன்ராசு, ஆர். கதிர்ராசு, எம். ஏ. விசுவ நாதன். மேலும் வேண்டிய உறுப் பினர்களைச்செயற் குழுவில் சேர்த் துக்கொள்ள உரிமை உண்டு என் றும், இன்னுமொரு தீர்மானமும் நிறை வேற்றப்பட்டு நன்றி கூற லுடன் கூட்டம் இனிதுமுடி வடைந்தது. எனத்தோழர் பி. கோவிந்தசாமி (துணைசெயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

ஜி. கல்லுப்பட்டி—சிற்றூர்க்கிளை

ஜி. கல்லுப்பட்டி, அக். 15—

பெரியகுளம் கல்லுப்பட்டி தி.மு. கழக அமைப்புக்கூட்டம் 14-10-49 அன்று தோழர் அ. வீ. ப. கார்த்தி கேயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது "திராவிட முன்னேற்றக் கழகம்— ஜி. கல்லுப்பட்டிச் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—நாக. கோ. பழனி சாமி; துணைச் செயலாளர்:— அ. வீ. ப. கார்த்திகேயன்; பொருள் உறுப்பினர்:— ரா. துரைசாமி; விளம்பர உறுப்பினர்:— பூ. பெ. நடராசன். ஏனைய செயலுறுப் பினர்கள்:— அ. ப. இராமசாமி, கு. வேலுசாமி, தா. பொன்னப் பன், ஏ. செ. வீ. ரத்தினம், ம. ரா. குப்புசாமி. எனத் தோழர் பூ. பெ. நடராசன் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

மறுப்பு

வேலூர், அக். 13—

தி. மு. க. பிரசாரக் குழு உறுப் பினரும், 'தீப்பொறி' ஆசிரியருமான தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள் :—

'9—10—49-ல் திருவத்திபுரத் தில் நடந்த வட ஆற்காடு மாவட்ட நிர்வாகக் கமிட்டிக் கூட்ட சம்பந்த மாக (வெளியூர்) 12—10—49-ல் வெளிவந்த "விடுதலை"யில் தலை வரும், செயலாளரும் வெளியேறி னார்கள் என்று வெளிவந்த செய்தி முழுப் பொய்யானதொன்றாகும் தலைவர் தோழர் சி. வே. சுப்ப ராயன் அவர்கள்தான் அன்றைய கமிட்டிக் கூட்டத்திறகுத் தலைமை வகித்து நடத்தினார்கள். மிகச் சிறுபான்மையாக இருந்த பெரி யார் ஆதரவாளர்கள்தான் வெளி யேறினார்கள். திராவிட முன் னேற்றக் கழகத்துக்கு ஆக்கந்தரு பவர் பெரும்பான்மையினராக இருந்ததால், மாவட்டக் கமிட்டி அப்படியே முன்னேற்றக் கழகக் கமிட்டியாக மாற்றியமைக்கப்பட் டது. மொத்த உறுப்பினர்கள் 56 பேர்களில் 33 பேர்கள் கூட்டத் திற்கு வந்திருந்தனர். நான்குபேர் கள் கடிதம் மூலம் கருத்துத் தெரி வித்திருந்தனர். வெளியேறிய ஆதரவாளர்களின் எண்ணிக்கை பதின்மூன்றுதான். மறறப் பெரும் பான்மையினர் முன்னேற்றக் கழக மாகமாற்றஒருமித்த கருத்துக்கூறி, தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

உண்மையைத் திரித்துப் பொய் மையாகக் கூறும குணம "விடு தலை"க்கு இந்த அளவுக்குப் படிந் திருக்கும என்று எண்ணவில்லை. ஏனெனில், அதில்வரும செய்தி கள்தாம, மிகமிக உண்மையானவை கள் என விளம்பரப்படுத்தபபட் டிருந்தன. "விடுதலை"யில் செய்தி கள் வெளியிடும் ஆதரவாள அன்பர் கள் சிலரின் அகராதிப்படி, நஞ்சு கலந்த பொய்க்கு உண்மை என்று பொருள்போலும. வேறோர் சூழ் நிலையில், பாரதிதாசன் பாடிய "விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும' என்ற அடி இந்தச் சந்தர்ப் பத்தில் நினைவுக்கு வருகிறது.

சி. பி. சிற்றரசு,
வேலூர். 13-10-49.

கடமையில் தலைவர் தவறினர் நாம் தவறவில்லை

புதிய கழகம் போட்டியின் காரணமல்ல -பொறுமையின் விளைவுமல்ல

அடக்குமுறை அரசாங்கம் அழிந்தேதீரும்

——(0)——

வ. ஆ. திருப்பத்தூரில் மதியழகன்

திருப்பத்தூர், அக். 18—

நேற்று மாலை இவ்வூர் பாஞ்சாலை மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. விழாக் கூட்டத்திற்கு இவ்வூர் முனிசிபல் சேர்மன் தோழர் சி. எம். சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். மாணவர்களும் வாலிபர்களும் சிறப்பாக கூட்டத்தை அலங்கரித்தனர்.

மேடை முன்புறமாக அமைக்கப்பட்டிருந்த கம்பங்களில், திராவிட முன்னேற்றக் கழகக் கொடி வானளாவப் பறந்துகொண்டிருந்தது. கூட்டத்தின் ஆரம்பத்தில் "வாழ்க எமது வளமார் திராவிட நாடு" என்ற திராவிடப் பண் பாடப்பட்டது.

பின்னர் தலைமை தாங்கிய முனிசிபல் சேர்மன் சி. எம். சுப்பிரமணியம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணத்தைக் கூறிவிட்டுக், கழகத்தின் அவசியத்தையும், பொதுமக்கள் ஆதரிக்கவேண்டிய கடமையைப் பற்றியும் கூறி, தோழர் கே. ஏ. மதியழகனைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு முன்பாக பொதுமக்களையும், பேச்சாளர்களையும், தலைவரையும் வரவேற்று வடாற்காடு மாவட்ட தி. மு. க. அமைப்பாளர் எம். நடேசன் அவர்கள் பேசினார்.

கே. ஏ. மதியழகன்

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் பேசியதாவது:—

"அன்புள்ள தலைவரவர்களே! பெரியோர்களே! வாலிபர்களே! தாய்மார்களே! திருப்பத்தூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மிகமிக மகிழ்கின்றேன். இன்று நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் தழைத்துள்ளன. நேற்றும் இன்றும் தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலே, வெகு விமரிசையாக முன்னேற்றக் கழகத்தின் துவக்கம் நடந்தேறியுள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் வெளியிட்டு இருக்கிறார்கள் இந்தக்கூட்டங்களைச் சிறப்பித்ததன் மூலம். ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது என்று சொல்லித்தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இன்று நீங்கள் இல்லை.

வேதனையோடு வெளியேறினோம்

நாடே நன்கறியும், பெரியார் அவர்களின் திருமண ஏற்பாடும், அதன் பயனாய்க் கட்சியிலே ஏற்பட்ட சங்கடமான நிலைமைகளைப்பற்றியும். பெரியாரிடம் கெஞ்சினோம், வேண்டினோம், கண்ணீர்விட்டுக்கதறி நின்றோம், நமது கண்ணியத்தை எடுத்துரைத்தோம். கட்சி காப்பாற்றப்பட வேண்டிய கடமையையும் விளக்கினோம். தலைவரே! தகாத காரியம் தாங்கள் மேற்கொண்டுள்ள திட்டம்! எந்த இலட்சியத்தை நாட்டிலே போதித்தோமோ, எந்தக் கொள்கையின் சின்னமாய் தாங்கள் விளங்கினீரோ, எந்தக்கொள்கையினால் நமது சமூகம் அடிமைவிலங்கை உடைத்துப் பகுத்தறிவுவாழ்வை மேற்கொண்ட சமூகமாக மலர முடியும் என்று கூறி வந்தோமோ, அதற்கு முரணாக, அதைக் கேலி செய்வதாக உள்ளதே தங்கள் செயல், என்றெல்லாம் கேட்டோம். ஆனால் நமது முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. அது மாத்திரமில்லாமல் விபரீதமாயும் முடிந்தது. வேறுவகையில்லாமல் வேதனையோடு வெளியேற வேண்டியவர்களானோம். இது தான் நமது வரலாறு.

பொறுப்பை உணர்ந்தோம்

இந்த நாட்டின் நிர்க்கதியை நினைத்து இந்நாட்டிலே வாழும் மக்களின் அவல நிலையை நினைத்து அவர்கள் நாதியற்ற நிலைமையை நினைத்து அவர்களுக்கு தொண்டுசெய்ய வேண்டிய நமது பொறுப்பை நினைத்து இந்த நிலைமையை மேற்கொள்ள வேண்டியவர்களானோம். ஜன நாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டு, கொள்கைகள் காற்றிலே பறக்கவிடப்பட்ட நிலையை நம்மால் சகிக்க முடியவில்லை. ஆகவேதான் நமது கொள்கையின் பெருமையைக் காக்க, தலைவரே தவறினும் நாம் தவறுதவரே என்பதைத் தரணிக்குக் காண்பித்தவர்கள் என்ற நமது நோமையை உலகுக்குச் சொல்லித்தீர, கொள்கைக்காக நாட்டிலே போராடித் தீர வேண்டிய பொறுப்பும் அவசியமும் நம்மைச் சேர்ந்தது என்பதை உணர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பில் வேலை செய்ய வேண்டியவர்களானோம்.

நமது கழகம் போட்டி ஸ்தாபனமல்ல, பொறுமையின் விளைவல்ல, ஆணவப் போக்கல்ல, இறுமாப்பின் காரணமல்ல, வேதனையின் விளைவு, கண்ணீர்க்கோட்டை! அதை நன்கு யாரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் வாழ்விலே துயரம்

நம்முடைய நாடு இருக்கிற நிலையிலே நாதியற்ற நம்முடைய இனத்திற்காக வாதாடுபவர்கள் யாருமில்லை. நாட்டின் அரசியல் நிலையோ நாளுக்கு நாள் மிகக் கேவலமாகிக்கொண்டு வருகிறது. மக்கள் வாழ்விலே மகிழ்ச்சி கிடையாது. எங்கும் பஞ்சம், பட்டினி, வறுமை விலைவாசி உயர்வு என்ற இந்தக் கோர நிலை நாட்டுமக்கள் வாழ்விலே துயரம் நிழலிடுகிறது. மறுபுறம் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஆள்வந்தவர்களின் அடக்குமுறை தர்பார் கோலோச்சுகிற காட்சி. சாதாரண கோரிக்கைகளுக்கெல்லாம் தடியடி, சிறைச்சாலை துப்பாக்கிப்பிரயோகம், கண்ணீர்ப்புகை, அவசரச் சட்டம் இவைகளைத்தான் காணமுடிகின்றன. ஜனநாயகத்தின்படி ஆளுவதாகக் கூறப்படும் நம்முடைய மந்திரிமார்களால், ஜனநாயகம் கேவலமாக்கப்பட்டு, சர்வாதிகார சாமரம் வீசப்படுவதைக் காண்கிறோம்.

அடக்குமுறை ஆட்சி அதிகநாள் வாழாது

எண்ண உரிமையில்லை - எழுத உரிமையில்லை.—பேச உரிமையில்லை - கூட்டம் கூட உரிமையில்லை—என்று இப்படியே மிகச் சாதாரணமான அடிப்படை உரிமையையெல்லாம் அரசாங்கம் நசுக்கிவிட்டிருக்கிறது நாளுக்கு ஒரு புது அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுகிறது இப்படிப்பட்ட நிலையில் அரசாங்கத்தின் பாசிசப் போக்கு நம்மைத் திடுக்கிடச்செய்கிறது. நாம் வாழும் நாடு, ஜனநாயக நாடுதானா என்று நம்மையே கேட்டுக்கொள்ளச் சொல்கிறது. இனியெல்லாம் நாடாள்வோரிடம் திராவிட மக்களின் சார்பிலே கேட்க இன்று யாருமில்லை நம்மைத் தவிர. இப்படிப்பட்ட நிலை நீடிக்குமானால் நாட்டிலே நிச்சயமாய் அமைதி இருக்க முடியாது. மக்களின் தேவைகளைத் திருப்திபடுத்த முயலவேண்டும். மாறாக அடக்குமுறையை மட்டும் நம்பி ஆண்டுவிடலாம் என்று கனவு கண்டால், நிச்சயமாய்த் தோல்வியேயடையும். மக்களின் மகத்தான சக்தியின்முன்பு அடக்குமுறை ஆயுதம் கூட மழுங்கியேதீரும் என்றுமே எதேச்சாதிகாரம் வெற்றிபெற்றதில்லை; வெற்றி பெறப் போவதுமில்லை அடக்குமுறையையே நம்பி வாழ்ந்தவர்கள் பலர் அடைந்த நிலைமையைச் சரித்திரம் நமக்கு எச்சரிக்கை செய்கிறது அதிலிருந்து நமது அரசாங்கம் பாடம் பெறவேண்டும்.

ஹிட்லரின் பாதை

ஜெர்மன் நாட்டு ஹிட்லர், இத்தாலியநாட்டு முசோலினி, பிரெஞ்சு நாட்டு லூயி, ரஷ்ய நாட்டு ஜார் இவர்களெல்லாம் என்ன ஆனார்கள்! அவர்களின் சிறைச்சாலை, தூக்கு மேடை, துப்பாக்கி, ராணுவம், பட்டாளம், பரிவாரம் இவைகளெல்லாம் என்ன ஆயிற்று? மக்கள் சக்தி முன்பு தூள் தூளாகிவிடவில்லையா? இவைகள்தான் ஞாபகமில்லாவிட்டாலும், சிவப்பு சீனாவாவது அறிவை உண்டாக்க வேண்டுமே! பழம் பெருநாட்டின் தலைவர், ஆசியக் கண்டத்தின் ஜோதி, சூள் வம்சத்தின் வழிவந்தவர், சன்யாட்சனின் வாரிசு என்றெல்லாம் புகழப்பட்ட சியாங், சென்ற யுத்தத்தின்போது அமெரிக்காவாலும், அகில உலகத்தாலும், ஈடுஇணையற்ற தலைவர் என்று, எப்படி இன்று நேரு அமெரிக்க அரசாங்கத்தாலும், அரசியல் அறிஞர்களாலும் போற்றப்பட்டு, புகழ்மாலை சூட்டப்பட்டு உலவுகிறாரே, அப்படிப்பட்ட சியாங்கின் நிலையே இன்று தங்குவதற்கு இடம் எங்கேதேடுவது என்று வருந்தாகிவிட்டதே! இதை நம்முடைய சர்க்கார் பொறுப்புடன் யோசிக்கவேண்டும்.

சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்ட அவசரச் சட்டங்கள் என்றால், எப்படி அமைதி அழிந்தது? சட்டம் ஏன் அவமதிக்கப்பட்டது? எது அந்த சூழ்நிலையை உண்டாக்கியது? இவைகளை சர்க்கார் பொறுமையாக உணராதவரை இதற்குப் பரிகாரம் தேடும் மார்க்கம் கிடைக்காது.

வாழ்வதா சாவதா என்ற நிலை.

திராவிட மக்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் இன்று அரசியல் வானிலே குவிந்துகொண்டிருக்கிறது. புதியதாக வடநாட்டு இந்தி மொழி ஏகாதிபத்யம் நம்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டச் சகல பகுதிகளிலும் பாதை அமைத்துக்கொண்டிருக்கிறது. அரசியல் நிர்ணயசபை என்ற பெயரால் நம்மை நிரந்தர அடிமைகளாக்க டில்லியிலே சாசனம் தயாராகிக்கொண்டிருக்கிறது. நமது பொருளாதார வாழ்வு பாதிக்கப்பட்டு, திக்கற்றவர்களாக, தரித்திரர்களாக ஆக்கப்பட்டு வருகிறோம். தொழிலாளர்கள் விவசாயிகள் போதுமான வருமானத்தைப் பெறமுடியவில்லை. கள்ளமார்க்கட் கோரதாண்டவம் புரிகிறது. விலைவாசி உயர்வு விஷமென ஏறியுள்ளது. வாழ்வதா சாவதா? என்றபிரச்சினை பலகோடி மக்களுக்கு இவைகளையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டே உள்ளது ஒரு அரசாங்கம்.

நமது பொறுப்புகள்.

நம்முன்னே, மொழிவாரி மாகாணம் என்ற பெயரிலே தென்னாட்டிலே பகைமையை வளர்க்க தூபமிடப்படுகிறது. தமிழர்க்குச் சொந்தமான சென்னையை ஆந்திரா உரிமை கொண்டாடுவது, போன்ற அர்த்தமற்ற கோரிக்கை உயிர் பெறுகிறது. தமிழகத்திலே சேர விரும்பும் திருவிதாங்கூர் தமிழர் சுய நிர்ணய உரிமை மறுக்கப்படுகிறது. மொழிவாரி மாகாணங்களுக்குள்ள நல்லுறவை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு, பகைமை வளராமல் சுமுகமாய்த் தீர்த்து ஆந்திரர்க்கும், கேரளருக்கும், கன்னடியருக்கும், தமிழருக்கும் தங்களது நியாயமான பங்கு சேர வேண்டியதைச் செய்ய வேண்டிய பொறுப்பெல்லாம்; திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. இந்த நாட்டை வைதீக [illegible]யாக்கி மக்களை மௌடீகத்[illegible]குத் தலை வணங்கச் செ[illegible] ஆரியமாயையை அ[illegible] வேண்டிய பணியும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்ததாகிறது.

இது உங்கள் கழகம்.

இந்தக் காரியங்களை யெல்லாம் சாதிக்கத்தான், திராவிட முன்னேற்றக் கழகம் உங்கள் முன்னே வந்துள்ளது. உங்களது முழு ஆதரவு உண்டு என்ற நம்பிக்கையால். காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை உங்களது கோரிக்கை உங்களது நலனுக்கு, நல் வாழ்வுக்கு, உரிமைக்கு, பாடுபடவே திராவிட முன்னேற்றக் கழகம் மலர்ந்துள்ளது. கொடுமைக்குள்ளாக்கப்பட்டு, அநீதிக்குப் பலியிடப்பட்டு, அக்ரமத்திற்கு இரையாக்கப்பட்டிருக்கும் நிரபராதிகளுக்காக போராட வந்த பாதுகாவலன் திராவிட முன்னேற்றக்கழகம். விடுதலைப் போருக்கு அணிவகுப்பை ஏற்படுத்த வந்த பாசறை இந்தக் காரியங்களுக்காகச் செய்யப்படும் முயற்சியில் அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்துத் தாங்கும் கேடயமாய் விளங்கும். தியாகம்புரிய, செயலாற்ற, அல்லல்களை ஏற்றுக்கொள்ள தங்கள் உயிர், உடல், உடமை இவைகளை அர்ப்பணிக்கத்தயாராகியுள்ள பல ஆயிரம் வாலிபர்களைப் பெற்றுள்ளது திராவிட முன்னேற்றக்கழகம். அதனுடைய கொள்கை வெற்றி பெற்றே தீரும் வெற்றிபெற்றாக வேண்டும். இந்த நாடு உருப்படவேண்டுமானால்; எனவே வாலிபர்களை அழைக்கிறேன், இளைஞர்களை அழைக்கிறேன், மாணவர்களை அழைக்கிறேன் இந்த அணி வகுப்பிலே பங்கு கொள்ள. இந்த அணி வகுப்பு நமது விடுதலைப்படை, பகுத்தறிவுப் பட்டாளம், உரிமையை வாங்கித்தரும் சேனை, இவைகளின் தளகர்த்தர்களாக நீங்கள் ஆக வேண்டும். நாடெங்கும் கிளைக் கழகங்களை நிறுவவேண்டும். திக்கெல்லாம் நமது லட்சியம் பரவவேண்டும் அதற்கு உங்கள் ஒத்துழைப்புத் தேவை. அந்த ஒத்துழைப்பைத் தந்து உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்"

பின்னர் வேலூர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், சுயமரியாதை இலட்சியங்களைப் பற்றியும், சமுதாய சீர்திருத்த சம்பந்தமாய் நாம் ஆற்றிவந்த பணி பற்றியும், தீபாவளிப் பண்டிகை பற்றியும், தலைவர் பெரியாரிடம் நாம் வைத்திருந்த மரியாதை பக்தி பற்றியும், அவரது தகாத திருமணத்தின் தவறு பற்றியும் விளக்கமாகப் பேசினார்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன், தோழர் எம். நடேசன் நன்றி கூறக் கூட்டம் சிறப்பாக முடிந்தது.

——

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி

...ன்னைமயிலாப்பூர்:- இரா. நெடுஞ்செழியன், மா. இளஞ்செழியன்

...ர்:— முருகு. சுப்பிரமணியம்

...சாவூர்:— ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், ஜி. பராங்குசம், எஸ். எஸ். மணி

செகுடந்தானி:— ஜி. என். ராஜு

நாகர்கோவில்:— புலவர். கே. கோவிந்தன், இரெ. இளம்வழுதி, கி. மனோகரன்.

22-10-49

சிதம்பரம்:— ஈ. வெ. கி சம்பத், இராமாமிர்தத் தமமையரர், எஸ். கே. சாமி

ஆற்காடு:— காஞ்சி. கலயாணசுந்தரம், கே. ஏ. மதியழகன்

ஆரணி:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்

23-10-49

காஞ்சிபுரம்:— சி. என. அணணுதுரை, கே. அனபழகன், சத்தியவாணிமுததது. சி. டி. டி. அரசு, ஏ. ஆர். வெங்கட்ராமன்.

திருவாரூர்.— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத்

திருவண்ணுமலே:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்

கடலூர் (ஓ. டி.):— ஏ சித்தையன், என். வி. நடராசன்

சுண்டக்காமுத்தூர்:— ஜி. என். ராஜு

திண்டிவனம்:— இரெ. இளம்வழுதி, இராமாமிர்தத்தம்மையார்.

வத்தலக்குண்டு:— டி. கே. சீனிவாசன்

24-10-49

திருத்துறைப்பூண்டி:— ஈ. வெ. கி, சம்பத்

இனி நடப்பவை

சென்னை ஓட்டேரி—இவ்வூர் நகர உட்கிளையின் கூட்டம் ஒன்று 20—10—49 மாலை 5 மணிக்கு (எண் 21, பிரிக்லின் ரோடு) கழக மனையில் நடைபெறும்.

* * *

ஆரணி—இவ்வூர் பகுத்தறிவு இலவசப் படிப்பகத்தின் செயற்குழுக்கூட்டம் 22-10-49 சனிமாலை 5 மணிக்கு நடைபெறும். அது போது பல முக்கியமானவைகள் பற்றி ஆலோசிக்கப்படும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

தஞ்சை—21-10-49 வெள்ளி மாலை 5 மணிக்கு இவ்வூர் திலகர் திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அது போது தோழர்கள் என். வ. நடராசன், ஏ. வி. பி ஆசைத்தம்பி, ஜி. பாராங்குசம், எஸ். எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை—இந்நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம், 21—10—49 வெள்ளிமாலை 3 மணிக்கு நகர தி. மு. க. கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது இந்நகரப் பள்ளி, கல்லூரிகளிலுள்ள ஆர்வமுடைய மாணவத் தோழர்களனைவரும், வரும்படித் தோழர் ப. பாலசுந்தரம் வேண்டுகிறார்.

* * *

சென்னை மயிலாப்பூர்— திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர மைலாப்பூர் உட்கிளையின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 21-10-49 வெள்ளி மாலை 5-30 மணிக்கு மயிலாப்பூர் முண்டக்கண்ணி அம்மன் கோயில் அருகில், தோழர் பொன். கு. கோதண்டபாணி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, மா. இளஞ்செழியன் எம். ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருமணம்

காயல்பட்டினம், அக் 16—

சென்னையில் ஆறுமாதங்களாக, விடாது இந்தி எதிர்ப்பு மறியல் செய்தவரான தோழா சாலை கபீா அவர்களுக்கும், இவ்வூர்த் தோழர் எஸ். டி. முகமமது அபூபெக்கர் அவர்களின் தஙகை தோழியர் எஸ் டி. செய்யிது அகமது பாத்தும்மாள் அவர்களுக்கும் 14-10-49-ல் பதிவுத் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டிப் பல வாழ்த்துக்களும், தந்திகளும் வந்தன. இதன் நினைவாக ரூ 1-1-1. வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]

புதிய ஏஜண்டுகள்

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 20-10-49 முதல் 'மாலை மணி' விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கரூர்:
பி. தான்தோனி,
சந்தானம் செசில் ஷாப்
புதுத் தெரு.

வேலூர்:
வி கிருஷ்ணசாமி பிள்ளை,
சஸ்பா—வேலூர்.

தஞ்சாவூர்:
வி. சந்திரப்பூ,
கீழவாசல், தஞ்சாவூா

அறிவிப்பு

வெளியூா ஏஜண்டுகள சிலர் இன்னும் தஙகளுடைய பாக்கியை அனுபபாமல் இருந்து வருவதைக்கண்டு வருந்துகிறோம். பாக்கியை அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்குப் பத்திரிகை அனுபபுவதை நிறுத்தி வேறு ஏஜண்டுகளை நியமிக்கப்படும். என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொளளுகிறோம்.

மானேஜர் "மாலைமணி"

திருமணங்கள்

விக்கிரம சிஙகபுரம், அக். 10—

அம்பாசமுத்திரம் தோழர் குருநாதன் என்கிற ஆழ்வார்சாமிக்கும், பாளையங்கோட்டைத் தோழியர் சரஸ்வதி என்கிற சங்கரம்மாளுக்கும் நடந்த சீர்திருத்தத் திருமண நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம. மகிழ்ச்சி! [ஆ-ர்].

* * *

திருவையாறு, அக். 11—

ஆவணித்திஙகள் 29 ஆம் நாள் வளப்பகுடியில் நடைபெற்ற, தோழர் தஙகவேலு — தோழியர் மீனாட்சித்திருமணததில், தோழர் முருகையன், புலவர் வி. அ. அரங்கசாமி ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் குறித்து சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம. மகிழ்ச்சி!

"மாலை மணி"

20—10—49 முதல்

விலை அணு ஒன்று

ஏஜண்டுகளுக்கு;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (செனனை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணு விதம விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ. 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாஙகள் அனுபபியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும், 20—10—49 முதல் அனுப்பபபடும். தொடார்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுப்பப்படவேண்டுமானல், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். —மானேஜர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthukumaru Chetty Street, Madras.